11

பாரியூர்

ஸ்ரீ கொண்டத்துக் காளியம்மை

ஆற்றுப் படை

11

4 - JUL 1942
MADRAS

1812

வித்வான்

இ. கே. நடேச சர்மா

உ

பாரியூர்

ஸ்ரீ கொண்டத்துக் காளியம்மை

ஆற்றுப் படை

4 - JUL 1942

894 · 8111

ஆக்கியோன் :

வித்வான் - இ. கே. நடேச சர்மா

லயோலாக் கல்லூரி, சென்னை.

1812

இரண்டாம் பதிப்பு

இஃது பாரியூர் தேவஸ்தானம் தருமகர்த்தர்

P. S. முத்துவேலப்ப கவுண்டரால்

ஷை யூர்

அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக நினைவு மலராக

வெளியிடப்பெற்றது

பதிப்புரிமை] 1942 [விலை அணா 5

031,1

முதற் பதிப்பு 22-4-42—500 பிரதிகள்

இரண்டாம் பதிப்பு 6-6-42—1000 பிரதிகள்

சாது அச்சுக்கூடம்,

இராயப்பேட்டை, சென்னை



தருமகர்த்தர்

அறநிறை நெஞ்சர், அருள்வழி கண்ணர்,
அன்னையின் அன்பர், அருந்தமிழ் விநோதர்,
கொடைமடம் தலைவு கொங்குவேளாளர்,
முழுப்பணி செய்த **முத்துவேலப்பர்.**

4 - JUL 1942

பாயிரம்

கோயம் புத்தூர்க் கோபி செட்டி
பாளைய மருங்கிற் பாரியூர் கொண்ட
காளி யம்மையின் கண்முன் நின்று
பொய்யினை மறந்து, மெய்ம்மயிர் சிலிர்ப்ப,
நெஞ்சநெக் குருகி, நாத்தழு தழுப்பத்
துதிக்குந் தூய தொண்டர் தம்மொடு,
இக்கா லத்தே யின்மைக் கருத்தொடு
கொக் கரிக்கின்ற கோணல் நெஞ்சரைக்
கூட்டு வித்தே, குமரியின் அருளால்
இருமையும் பெற்றுய, என்தமிழ் மொழியால்
அவர்தமை அன்னைக் காற்றுப் படுத்தேன்.
அகத்தி லெழுந்த அன்பால் ஆசையால்
அன்னையைப் பாடினேன். அவளு மருளினள்.
கவியெனுங் கருத்துக் கனவிலும் மெனக்கிலை.
நூற்கருத் துக்கள் நுவலப் படினே
நூல்களை விட்டு நுவன்ற புலவனை
நோவது நொய்ம்மை. நுண்புல முடையார்
அங்ஙனஞ் செய்யார். அத்துணி வொன்றே
என்னை யிதனை யெழுதுமா செய்தது.
சாற்று கவிகளிற் சற்றும் பசையிலை.
என்னுரைக் கென்னே முன்னுரை ? என்பயன் ?
நுண்மாண் நுழைபுல நூலறி புலவர்
காய்தலு மின்றிக் களித்தலு மின்றிக்
கண்ட பின்னரும் கேட்ட பின்னரும்
கூறும் மொழிகளே கோடி யுறுமால்.
அம்மொழி தாமே ஆக்க மொழிகளாம்.
அன்றியிப் பிறப்பால் ஆவதென் எனக்கு ?

சேர நாட்டுச் செயிரில் பெருமையும்
பண்டைத் தமிழரின் பலபழக் கங்களும்,
இக்கா லத்தார் ஏதில் கருத்தும்,
பாரியூர்ப் பழமையும் பக்கவ ளங்களும்
எனவிது ஐந்தென எண்ணும் திறத்தது.
அறநிறை நெஞ்சர், அருள்வழி கண்ணர்,
அன்னையின் அன்பர், அருந்தமிழ் விநோதர்,
கொடைமடம் குலவு கொங்குவே ளாளர்,
முத்துவே லப்பர் முழுப்பொருள் தந்து
அச்சிது செய்தார். ஆதலின், அவரும்
அவர்தங் குலமும், அன்னையின் அருளால்
வழிவழி, வாழ, வாழ்த்துவ தேயென்
கடப்பா டன்றிக் கைம்மா றுளதோ ?
இதனைத் திறம்பட இம்மெனு மளவில்,
அன்னையின் பணியென அழகெலாம் பொருந்தக்
குறைகளே யின்றிக் குறைந்த செலவில்
அச்சி லமைத்தே அன்புட னுதவிய
சாதுப் பெயரிய சால்புடை யச்சுக்
கூடத் தார்க்குக் கோட்டமில் நன்றி
உரித்தா குகவே, உரித்தா குகவே.
வளமுறு தாய்மொழி வாழ்க ;
நாடெலா நற்றமிழ் நனிமுழங் குகவே.

சென்னை
6—6—1942

இ. கே. நடேச சர்மா

அகத்துப் பொங்கிய அன்பால் ஆசையால்
அவர்தமை யன்னைக் காற்றுப் படுத்தோன்
அருமறை வல்ல அழுக்கிலா அந்தணன்
நற்றமிழ் **வித்துவான் நடேச சன்மன்.**

பாரியூர் ஆற்றுப்படை
வரலாறும் பொருட்சுருக்கமும்

கோயம்புத்தூர் ஜில்லா கோபிசெட்டி பாளையங் தாலுகா, கோபிசெட்டி பாளையத்தினை யடுத்த பாரியூர்க் கொண்டத்துக் காளியம்மையின் சந்நிதியில் நின்று துதிக்கும் தொண்டர் தம்மோடு இக்காலத்துச் சில தாந்தோன்றிகளைக் கூட்டுவித்துத் துதிக்கச்செய்து அவ்வன்னையின் அருளால் இருமையும் பெற்றுய்யுமாறு அவர்தமை ஆற்றுப்படுத்தியது. இதனைப் பாடியவன் சென்னை லயோலாக் கல்லூரித் தமிழாசிரியன் வித்துவான், **இ. கே. நடேச சன்மன்.**

1. கொங்குநாட்டின் பெருமை

உலகன்னையின் கருணை வெள்ளம் போலப் பெருகியோடும் காவிரி பவானி என்னும் ஆறுகளின் பெருக்கால் சேரநாட்டில் நெல்விளைந்து பொன் மிகுகின்றது. இந்நாட்டினைச் சேரநாடென்றும், மலைநாடென்றும் கொங்கு மண்டில மென்றும் மக்கள் கூறுவர். விரிந்த மனமும் பரந்த அறிவும் அருளும் அன்பும் உடைய பல வேந்தர் இந்நாட்டினை யாண்டு வந்தனர். கலை வளர்ச்சிக்காகக் காசினைக் காசாகப் பாராது சொரிந்தனர். புலவர் பாட்டினுக்காகப் பூமியையுங் தந்தனர். இமயவரம்பன் நெடுஞ் சேரலாதனைப் பாடிய **குமட்டூர்க் கண்ணனூர்** பிரமதாயம் பெற்றூர். பல்யானைச்செல் கெழு குட்டுவனுதவியால் **பாலைக் கௌதமனூர்** ஒன்பது வேள்விகள் செய்து, பத்தாம் வேள்வியில் மனை

வியுந் தாமுமாய்ச் சுவர்க்கம் சென்றனர். களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலைப்பாடிய காப்பியாற்றுக் காப்பியனாரென்னும் புலவர் நாற்பதிலக்ஷம் பொன்னையும் ஒருபாதி நாட்டையும் பரிசிலாப் பெற்றார். கடல் பிறக் கோட்டிய செங்குட்டுவனைப் பாடிய பரணர் அவன்மகன் குட்டுவஞ்சேரலென்பானைப் பரிசிலாகப் பெற்றார். ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைப் பாடிய காக்கை பாடினியார் ஒன்பது துலாம் பொன்னும் நூறாயிரங்காசும் பெற்றார். கபிலர் செல்வக் கடுங்கோவாழியாதனைப்பாடி நூறாயிரம் பொற்காசையும், ஒருமலை மீதேறிக் கொடுத்த நாட்டையும் பெற்றார். அரிசில் கிழார் தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறையைப் பாடி ஒன்பது நூறாயிரம் பொற்காசுகளையும் அரசுகட்டிலையும் பரிசிலாகப் பெற்றுச் சிங்காதனத்தை அவனுக்குத் திரும்பக் கொடுத்தார். குடக்கோ இளஞ்சேரலிரும்பொறையைப் பாடிய பெருங் குன்றூர்கிழார் முப்பத்திரண்டாயிரம் பொற்காசுகளையும் பிற பரிசில்களையும் பெற்றார்.

2. தமிழரின் பழக்க வழக்கங்கள்

புலவர் பாடிய புகழ்மிக்க கொங்குநாட்டினர் உழுதொழிலைச் சிறப்பாகக் கொண்டவர்கள். மலையும் மண்ணுந் தோன்றுவதற்கு முன்னேயே வாளுங் கையுமாய்த் தோன்றிய முதுகுடி மக்கள். நல்லவற்றின் நன்மையையும் தீயவற்றின் தீமையையும் நன்கு அறிந்தவர்கள். கடலை வருணன் கோயிலாக வைத்து வருணனை வணங்குவர். அக்கினியையும் காற்றையும் ஆகாயத்தையும்

கடவுளாகப் போற்றுவர். சூரிய சந்திரர்களேயும், இரஹங்களேயும் நட்சத்திரங்களேயும் வணங்குவர். பிள்ளேப் பேற்றுக்காக மன்மதனேத் தொழுவர். செல்வத்திற்கு லக்ஷ்மியையும், ஞானத்திற்கு நாம களேயும், தெய்வமாகக் கொண்டாடுவர். வெற்றி குறித்துக் காளியைத் துதிப்பர். மூதேவியை அல்லது சேட்டைத் தேவியைக் கேடுவிளேக்குந் தெய்வம் என்பர். மக்களின் வாணுளே அறுதியிடும் யமனேக் காலன், என்பர். **கோங்குவேளிர் வேதவழி பட்டவர்கள்.** குறிஞ்சி முதலிய ஐந்திணேப் பகுப்பும் வேதங்களாற் கொள்ளப்பட்டதே. ஆனுல் உரை காரர்கள் தமிழ்க் கருத்தினே யறியாது ஏதேதோ எழுதிச் சென்றனர் என்ப. பூமியை மாதென்பர். தண்ணீரையும் அதனேத் தருகின்ற மேகத்தையும் போற்றுவர். கப்பல்கள் கடலில் நன்கு இயங்கு மாறு காற்றினேத் துதித்து அநுகூலமான காற்றி னேப் பெற்றவர்கள். **முனிவர், தேவர், பிதிரர் இவர் தம் கடன்களே முறையே செய்பவர்.** அந்தணர், அரசர், வைசியர், வேளாளர் என்னும் நான்கு சாதி களும் அவர்க்குடம்பாடு. பார்ப்பார் வருந்துமாறு எச்செயலேயுஞ் செய்யார். பழிவிளேக்குந் தொழில் களே மறந்தும் செய்யார். தலேயின்மீது எவரும் விரும்பும் உச்சிக்குடுமியுடையர். **வேதங்கள் விதித்த வற்றைச் செய்வார். விலக்கியவற்றைச் செய்ய மாட்டார்.** சிவபெருமான், திருமால், நான்முகன், முருகக் கடவுள், இந்திரன், வருணன் இவர் தமக் குக் கோயில்கள் கட்டி அவர்தம் திருவுருவங்களே அங்குப் பிரதிஷ்டை செய்து வழிபடுவார். 'பிள்ளேப் பேறு பெற்றவர்களே இருமைப் பயனேயும் அடை

வர், என்னும் உண்மை தமிழர்க்கு நன்கு தெரியும். திருமாலின் பஞ்சாயுதங்களைக்கொண்ட ஐம்படைத் தாலியை மார்பில் அணிவார். பிறர் சிறிதும் அறியா வண்ணம் மகளிர் முயக்கினை விரும்புவர். 'தாய் தந்தையர் கொடுப்பதற்கு முன் ஒருவனுக்கும் ஒருத்திக்கும் கண்ணும் மனமும் தம்முள் இயைவதே நன்மணம்' என்னும் கொள்கையினை யுடையார். உடற் சுத்திக்காகப் புண்ணிய தீர்த்தங்களில் நீராடுதலையும், பாவந்தீரக் கடலாடுதலையும், 'உப சுருதி' என்னும் நற்சொல் அல்லது விரிச்சி கேட்டலையும் சகுனம் பார்த்தலையும் வழக்கமாகக் கொண்டவர். வேத மந்திரங்களை ஓதுவிப்பர். தமிழ்ப் பாட்டுக்களைப் பாடுவர். வேய்ங் குழலூதித் தெய்வங்களை வேண்டுவர். வருந்தி வந்தவரைக் கண்டு இரக்கத்தால் அவர் தமக்கு வேண்டுவன கொடுப்பர். மயக்கந் தீர்ந்த அறிவினையுடையவர். ஆகவநீயம், காருகபத்தியம், தக்ஷிணாக்கினி என்னும் மூன்று வகைப்பட்ட அந்தணர்தம் அக்கினி காரியங்களைக் குறைவின்றி நடத்துவிப்பர். அன்பும் அருளும் உடையர். பலவேத வேள்விகளைச் செய்வித்து யூபம் நட்ட புகழ் மிக்க மரபில் வந்தவர். பிறர்செய்த நன்றியை மறவாத நல்ல தருமத்தை யுடையவர். 'நல்லன போல யிருக்கவும், நியாயத்தை யுடையன போலே யிருக்கவும், பழையோரோழகிய ஒழுக்கமுடையன போலே யிருக்கவும், அன்பு பொருந்திய நெஞ்சை யுடைய மக்கள் இடையே புகுந்து அவர் தமைப் பிரித்தற்கு அலைகின்ற அயலோருடைய சிறப்பில்லாத மொழியைக்கேட்கமாட்டார்.' ஒருவர் மற்றொருவருக்கு முடிந்தவரையில் அரிய உபகாரங்களைப்

பண்ணி மனமகிழ்வர். 'பழைய நிலைமையையுடைய பெரிய மலையிடத்திலுள்ள பிளப்பினில் அரிய உச்சியினின்றும் கொள்ளப்பட்ட சிறிய இலையினை யுடைய நெல்லியின் இனிய பழத்தைப் பெறுதற்கு அரிதென்று கருதாது, அதனுற் பெறும் பேற்றினை யுஞ் சொல்லாது மனத்துள் அடக்கிச் சாதல் நீங்க' அவ்வைப் பிராட்டிக்களித்த அதியமான் நெடு மானஞ்சியைப் போலத் தமக்கென வரைந்து கொள்ளாது பிறர்க்குக் கொடுக்கும் கொடையாளர். **தமிழிலே பிறந்து, தமிழிலே வளர்ந்து, தமிழ் நூல் களைக் கற்று, தமிழ் நூல்களையே கற்பித்துத், தமிழி லேயே பேசித், தமிழிலேயே எழுதித், தமிழையே செவியுணவாக நுகரும் இன்ப வாழ்க்கையர்.** நோய் நொடி முதலியவற்ருல் நொந்தே போயி னும், மருந்தினையுண்டு, வலியராகித் தமிழே கற்பர்; கற்பிப்பர்.

3. இக்காலத்துச் சில தமிழர் கருத்து

இந் நாட்டினர் இங்ஙனமிருப்ப, இந்த உண்மைகளைச் சிறிதும் நீங்கள் உணராமல் "வேதம் இல்லை. வேதாங்கங்களுமில்லை. புல வர்களானும் தொல்லாணை நல்லாசிரியர்களானும் செய்யப் பெற்ற புராணங்களும் நூல்களும், பொய்க் கோட்டைகள். இலக்கியம் வீண். இலக் கணஞ் சும்மா. இலக்கணம் வல்ல புலவனைக் கயிற்ருல் இறுகப்பிணித்துக் கடலில் எறிந்துவிட்டு 'எறிந்தோம்' என்னும் செருக்குடன் திரியுங்கள். சங்க நூல்களை ஒழித்துப்போடுங்கள். புலவனுக்கு வாய்ப்பூட்டிடுங்கள். புலவன் ஒழிந்தால் கொடுங்

தமிழ் ஒழியும். ஒருபயனும் இல்லாத பழந்தமிழ் நூல்களைக் கற்ருல் கஞ்சிக்கு உப்பா? கடிக்கப்பயரு? பழந்தமிழ் கற்ற பண்டிதனுக்குப் பாட்டின் பாவம் தெரியாது. அண்டம் வரைக்கும் அளந்து கொட்டு வன். பசலித் தமிழினைக் கற்ருல் வாழ்ந்தாற் போலத் தான். அதனுல் எந்த நன்மையும் உண்டாகாது. பிறந்தவைகள் இறக்கும், இறந்தவைகள் பிறக்கும் என்பன போன்ற ஆண்டி மொழிகளைப் பேசிப்பேசி மோசம் போனீர்கள். அதனுல் மக்கள் வீரத்தை இழந்து விட்டனர். மானத்தை விற்று விட்டனர். நாட்டுப்பற்ருே சூனியமாய்ப் போயிற்று. நம்ம வர்க்கு நம்மவரிடமே பற்றில்லை. பொன்னில்லை. மணியில்லை. பேச்சு மூச்சற்றுப் பேதை மக்களாகி என்றைக்கும் ஏழையாய், என்றைக்கும் அடிமை யாய் இருக்கின்ருேம். இனி நமக்கு அவை வேண்டா. சாதி ஏன்? மதம் ஏன்? சாமி பூதம் இவற்ருல் என்ன பயன்? போதும் போதும். சாமிக்காகத் தொலைக்கும் பொருளால் நமக்கான நல்ல பல காரி யங்களைச் செய்துகொள்ளக் கூடாதா? பஞ்சாலை கள் கட்டாமல் சாமிக்கேன் அழவேண்டும்? ஏழை ஏழையென்று அவர்களுக்குச் சோறு கொட்டுகிறீர் களே. அடியார்கள் போலே, அன்புள்ளவர்கள் போலே 'சோணசலம்' எனச்சும்மா மொழிந்து, விபூ தியை அள்ளி அப்பிக்கொண்டு, உருத்திராக்ஷங்களை வாரி மேலே போட்டுக்கொண்டு, சுருட்டு, பீடி, கஞ்சா முதலிய மயக்கப்பொருள்களைப் புகைத்துத் திரியும் கோவணுண்டிகளைத் திருப்தி செயலால் என்னநன்மை ஐயா? நல்ல பழங்களின் சாற்றையும், புத்துருக்கு நெய்யையும், தேன், பால், பனிநீர், இள

நீர், கலவைச் சந்தனம் முதலியவைகளையும் ஒன்றுக்கும் பற்ருத-ஏனென்றும் கேளாத - சாமியின் தலையிற் கொட்டித் ததிங்கிணத்தோம் எனத் தைத்தாவாடித் தவிக்கின்றீர்களே. கோயிலும் வேண்டாம். குளமும் வேண்டாம். தருமத்தை வேருடன் களைந்து, பாவத்தைப் பலபடியாகச் செய்யுங்கள். சாமி சாமியென்ருல் என்றைக்குஞ் சங்கடந்தான். கடவுளைப் பகைக்கவும், அக்கடவுளைக் கண்டபடி பழிக்கவுங் கற்றுக்கொள்ளுங்கள். ஒரு க்ஷணங்கூடத் தாமதம் வேண்டா. கற்றுக்கொண்டால் அப்போது தான் உங்கட்கு உண்மையறிவு உதயம் ஆகும். அந்த உண்மையறிவு என்றைக்கு உதயமாயிற்ருே அன்றைக்கே நாட்டினைத் தாங்கும் நல்ல தூண்களாகி விடுவீர்கள்" என்று உளறிக்கொட்டி எங்கும் அலைந்துழன்று கொக்கரித்துக் கோணல் வழிப்போகுந் தமிழன்பர்களே, தயவுசெய்து கேளுங்கள். உங்களுடைய நன்மையைக் கருதி, அருளும் அன்பும் கலந்து சொன்ன அன்பர் மொழியிது. இதனைக் கேளுங்கள். கெட்டுப் போகமாட்டீர்கள். இம்மை மறுமைப் பேறுகளை எளிதில் அடைவீர்கள்.

4. பாரியூரும் அதனயலும்

இத்தகைய வளமுள்ள மலைநாட்டினில் **காஞ்சிக் கோயில் நாட்டுப் பகுப்பினில்** சேர்ந்தது தான் **பாரியூர்.** பவானியிலிருந்து பிரிந்து, நெளிந்து நெளிந்து, தெளிந்த நீருடன் பல வயல்களிற் பாய்ந்து செல்லும் கால்வாய்க் கரையில் அப்பாரியூர் இருக்கின்றது. ஆங்குச் சிவபெருமானுக்கும், திருமாலுக்கும் கொண்டத்துக் காளிக்குமாக மூன்று கோயில்

கள் இருக்கின்றன. மூன்றுங் குலோத்துங்க சோழன், மராட்டிய வீரனுன சிங்கச் சிவாஜி, ஆண்மை மிக்க ஒய்சளர் இவர் தம்மால் அக்கோயில்கள் பாராட்டப் பெற்றிருக்கின்றன என்பதை விளக்கும் பல கல்வெட்டுக்கள் உண்டு. விடங்கத் தலங்கள் ஐந்தனுள் பாரியூரும் ஒன்று. அமரவிடங்கப் பெருமான் என்னும் பெயரும் இதற்குச் சான்று பகரும். கடையெழுவள்ளல்களில் ஒருவனுன பாரியின் பறம்புமலை இப்பாரியூரில் தான் இருத்தல் வேண்டுமென அறிஞர் கருதுவர். அக்கருத்து நன்னர் ஆய்ந்து தெளியப்படல் வேண்டும். கொடைக்கையனுன கோபி செட்டி பிள்ளான் ஏழைகளுக்குக் கொடுக்கப் பொருளில்லாமல், பாரியூர் கொண்டத்துக் காளியம்மையைத் துதிக்க, அம்மையின் அருளால் பெரும் பொருள் பெற்று ஏழைகட்கு வரையாது வழங்கினுன் என்பர். ஈதலின் ஊதியம் அதுவன்ருே? முத்துக்குமரனேன்னும் வீரன் வெற்றியை விரும்பிக் காளியைத் துதிக்க, அன்னை மகிழ்ந்து பிரஸந்நமாகி, ஆசிகள் பல சொல்லிக் கனவாளொன்றனை மகிழ்ந்து கொடுத்தாள். அக்காரணத்தால் அம்மரபினர் 'கனவாள குலத்தினர்' என்றழைக்கப் பெற்றனர். பாரியூர் செல்லப் பலவழிகள் உண்டு. கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், சத்தியமங்கலம் என்னும் ஊர்களிலிருந்து குறைந்த செலவில் குறைந்த நேரத்தில் இவ்வூர் வரலாம். மோட்டார் வண்டிகளிலும் வரலாம். குறிஞ்சியாயினும் முல்லையாயினும் மருதம் போலே ஒன்று நூருக விளையும் விளைபுலங்கள் கணக்கில. வயல்களில் உழவர் கவலையில்லாமல் கவலை யேற்றத்தால்

நீர் இறைக்கும் ஓசை எங்கும் கேட்கும். காடுகளும், மேடுகளும், குன்றுகளும் பலவுண்டு. கல்லுக்கும் முள்ளுக்கும் குறைவே யில்லை. வெயிலின் வெப்பத்தை வெறுக்காத தன்மையாலே தொல்காப்பியர் 'வெம்மை வேண்டல்' என்னுஞ் சூத்திரத்தை எழுதியிருப்பினும் இருக்கலாம். காடுகளுக்கிடையே கல்வழிகளிலே அல்லது கப்பி ரோடுகளிலே மோட்டார் வண்டிகள் விரைந்து சென்றுவிட்டால் ஆகாயத்தில் வெண்மையான புகைப்படலம் போன்ற தூளிகள் எழுவதைப் பார்க்கப் பார்க்கப் பரமவிநோதம்! பெருவழிகளின் ஓரங்களிலுள்ள சில தண்டலைகளிலே கருப்பன், காடன், மாவடியான் என்னும் பெயர் கொண்ட தெய்வங்களின் உருவங்களை மண்ணாற் செய்து சுட்டு, வர்ணந்தீற்றி, உருத்த விழியும், பருத்த தொந்தியும், முறுக்கிய மீசையும், முன்கையிற் பிடித்த அரிவாளுமாய்க் கண்டவர் கதி கலங்கும்படி, சிலவிடத்தில் நின்ற கோலமாகவும், சிலவிடத்தில் இருந்த கோலமாகவும் கட்டியிருப்பர். கரிய பனை யொன்றிலிருந்து இன்னொரு பனைக்கு நீண்ட கரிய இருப்புச் சங்கிலி மாட்டப் பெற்றிருக்கும். அதனிடையே கட்டிய மணிகள், அருகில் மேய்கின்ற செம்மறியாடுகளின் கழுத்திற் கட்டிய மணிகளோடு 'கல்லென'ச்சத்திக்கும். இதுவன்றிப் பலவிடங்களிலும் எஃகினாற் செய்த வேல்களை நட்டு, அதன் தலையில் எலுமிச்சம் பழத்தை அழகு பொருந்தச் செருகிப் பூமாலைகள் அணிந்து, விடுபூக்கள் தூவி, சந்தனப் பொட்டுக்களுடன் அக்கம்பங்கள் காணப்பெறும். உலகத்தீரே பாரீர் இதனை ; பாரியூர் வாருங்கள் ; அவ்வூர்க்குப்

போக ஆறுபோன்ற அகன்றசாலை; அதுவே அந்தியூர் போகுஞ்சாலை. கோபிசெட்டி பாளையத்திலிருந்து காலாற் சென்ருல் இரண்டு கல் அல்லது மைல். வழியின் இருபுறமும் ஆகாயம் அளாவிய குலைமிகு தென்னை. வேறு பல மரங்களும் அங்கங்கே காணப்பெறும். ஆற்றின் ஒலி ஒருபால்; ஆலையின் ஒலி இன்னொருபால்; சங்குகளின் முழக்கம் பிறிதொருபால்; எருமைகளும் எருதுகளும் தத்தம் கழுத்து மணிகள் கல்லென ஒலிக்க, மெள்ள நடந்து செல்கின்றன. கரும்பு, கனிகள், மலர் இவற்றினின்றும் தேன் பெருகிக் கால்வாய்களிலும், பிற நீர் நிலைகளிலும் கலக்கின்றன. அத்தேனை மீன்கள் குடித்துக் குடித்து அம்மையைத் துதிக்கின்றன. இளங் கன்றுகள் உறங்குமாறு தேரைகள் பாட்டுப் பாடித் தாலாட்டுகின்றன. யானைகள் செல்லினும் தெரியாதபடி உயர்ந்து, கதிர்கள் முற்றிய கழனிகள் கண்ணுக்கெட்டிய வரையில் காண்கின்றன. மலர்த் தாழையும், கனி வாழையும், மஞ்சளும், வெள்ளை வெளேரென்ற பருத்தியும் இல்லாத இடமில்லை. அவற்றை எண்ணமுடியாது. வயல்களின் வரம்புகளில் பனையின் வரிசை. இதோ, பாரியூர் வந்து விட்டது. என்னம்மை வாழி! ஆ! சிங்கத்தின் மீது ஏறியிருக்கும் காளியின் கோயில்! சோலையின் இடையே உலகன்னையின் கோயில்! ஆற்றின் கரையிலே அன்னையின் கோயில்! செடிப்பூ, கொடிப்பூ, தாமரை, ரோஜா, நந்தி, நறவம், புன்னகம் என்னும் இவை செறிந்து வளர்ந்த மலர் வனத்திலே வண்டுகள் பொம்மென விம்முகின்றன. தரும கர்த்தர் முத்து வேலப்ப கவுண்டரின் முழுமனம்

போல எங்கும் குளிர்ச்சி! எங்கும் இன்னருள்! கோணற் புத்தியையுடைய வீணர்களே வாருங்கள். எங்கும் தொண்டர்கள் எழுந்து நின்று,

5. அன்னையின் துதியும் ஆற்றுப்படையும்

"தாயே, எங்கட்குத் தயை புரியவேண்டும். நாராயணியே, நாத ரூபத்தையுடையவளே. ஒருரும், ஒருகுலமும், குணமும், குறியும் இல்லாதவளே, களங்கமில்லாத முகத்தைக் களங்கப் படுத்துவார் போலே கஸ்தூரித் திலகத்தை மகிழ்ந்தணிந்தவளே, பரிதியும் நீ, மதியும் நீ, அழகு மிக்க தோள்களிலே பொன்வளைகளைப் பூண்டவளே, கழுத்தில் முத்து வடம் அணிந்தவளே, எல்லையில்லா அழகும் அன்பும் உடையாளே, தாமரைக் காட்டினை நீங்காது தங்குவோய், சக்கரங்களில் வசிப்பவளே, அக்ஷர உருவமா யிருப்பவளே, மும்மூர்த்திகளும் போற்றும் சத்தீ, பிரமக் கிரந்தியைப் பிளக்க வல்லவளே, அமுத மொழுகுகின்ற கயற்கணியே, பிறவிக் காட்டினைப் பிளந்தொழிக்கின்ற கோடரியே, கொண்டத் தம்மா, சங்கரி, சீகரி, சாம்பவி, சாந்தே, நிரஞ்சனை, நித்தியை, நிர்க்குணை, நிஷ்களை, கொங்கு நாட்டில் என்றும் உறைபவளே, எத்தகைய ஐயங்களையும் போக்கவல்ல அறிவினையுடையாய், கரிய கூந்தலாய், கரும்பின் சாறுபோல் இனிய மொழியுடையவளே, எவற்றையுஞ் செய்ய வல்லவளே, எல்லாமாக இருப்பவளே, **இரீங்கார மேன்னும் இனிய மாளிகையின் உச்சியிலிருந்து குறுகுறுக்கும் புறவே,** நல்லார் மனத்தை இருத்தற்கு இடமாகக் கொண்டவளே, அல்லவர் மனத்தை

அணுகாதவளே, உலகத்தாற்கு நற்கதி யளிப்பவளே, இரீங்கார மென்னும் இனிய மலர் பூத்த கிளையி லிருந்து கனிந்த பழங்களைக் கோதுகின்ற வளைந்த மூக்கினையுடைய கிளியே, எல்லா வரத்தையுந் தரு பவளே, பல அரிய யந்த்ரங்களில் வசிப்பவளே, மா கேச்வரி, மஹாதேவி, பாவங்களைப் போக்கும் பரா பரி, அன்னாய், மஹாசக்தி, பேராற்றல் உடையாய், விரும்பி வந்தோர்க்குச் சித்திகளை அளிப்பவளே, மந்த்ரம், தந்த்ரம், பெரிய யோகங்கள் இவற்றின் உருவமாயிருப்பவளே, மனுவித்தையும் நீ, மதிவித் தையும் நீ, மயிலிறகின் அடியினைப்போன்ற பற்களை யும், முத்துப்போன்று வெண்ணிறமுடைய முறு வலையும் உடையாளே, உலகன்னையே, பைரவி, பக வதி, பதுமாசனத்தாய், ஆயிரம் முடிகளும், ஆயிரங் கண்களும், ஆயிரம் வடிவமும், ஆயிரம் அடிகளு முடையாய், ரமணி, ரமையே, ரஞ்சனி, ரம்மியை, வேதங்களாலறியும் பெருமையையுடையவளே, விந் திய மலையில் விரும்பி வசிப்பவளே, விசயே, விமலே, நெருப்பிடை வதிவாய், மலயப்பொருப்பின் பேரன் னமே, பேரியவற்றுள் எல்லாம் பேரியாளே, சிறிய வற்றுள் எல்லாம் சிறியாளே, சர்க்கரான்னத்தை விரும்பி உண்பவளே, கர்மபந்தங்களுக்கு சாக்ஷி யாய் நிற்பவளே, லக்ஷ்மியும் ஸரஸ்வதியும் அருகில் நிற்ப, அன்பாலே அவர்களை ஆட்கொள்ளுகின்ற தாயே, மஞ்சளையும் குங்குமத்தையும் நிறையப்பூசிய தால் அள்ளிக்கொள்ளும் பேரழகு வாய்ந்தவளே, கற்பகக்கனியே, கருணை பொழிகின்ற கடைக் கண்ணினையுடையாய், கலைகளை விரித்துப் பேசுகின் றவளே, கலைமானை வாகனமாகக்கொண்ட கன்னிப்

பருவத்தாய், இடைச்சியர் கடைந்தெடுத்த வெண்ணெய்போன்ற இருதய முடையவளே, பசுபாசங்களை நாசஞ்செய்பவளே, சிவபெருமான் கொண்ட காமநோயினைப் புன்முறுவலால் போக்குகின்ற முகத்தாய், கயிலை என்னும் ஆண்யானையின் கார் மடப்பிடியே, முனிவர் மனத்து முழுநடம் புரிகின்ற அன்னமே, அழகின் கொழுந்தே, வீரத்தாயே, விண்ணின் மணியே, பல வேதக்கனிகளின் சுவைமிகு சாறே, விரைவில்வந்து வேண்டியவற்றை நிறையத் தருபவளே, தமிழுருவாக நின்று தமிழ் மக்கட்கு இன்பத்தை விளைப்பவளே" என்று துதிப்பர். நீங்களும் அத்தொண்டரைப்போல இன்பமுடன் துதித்து இம்மை மறுமைப் பேறுகளை அடைந்து உய்யுங்கள்.

உ

பாரியூர்

ஸ்ரீ கொண்டத்துக் காளியம்மை

ஆற்றுப் படை

1. கொங்குநாட்டின் பெருமை

அன்னையின் உண்ணெகிழ் அலகில் கருணையின்
தண்ணெனு மொழுக்கந் தாங்கிய பொன்னியின்
பவந்தீர் பவானி யாற்றின் பெருக்கால்
அன்னமுஞ் சொன்னமும் அஃகா வளனும்
செறிந்து விளங்கும் சேரநன் னாட்டில்.
மலைநா டென்றும் மாபெருங் கொங்கு
மண்டில மென்றும் மக்கள் நவில்வர்.
அறிவும் ஈரமும் அருளும் உடையர்
விரிந்த நெஞ்சுடை வேந்தர் ஆண்டது.
காசினைப் பொழிந்து கலைகளை வளர்த்தனர்.
புவியையுந் தந்து புலவரைப் போற்றினர்.
குமட்டூர்க் கண்ணார் குறித்தல் சான்ற
பிரமதா யத்தினைப் பெற்று மகிழ்ந்தார்.
பாலைக் கௌதமர் பல்மறை பயின்றே
ஒருமை யுளத்தோ டொன்பது வேள்விகள்
வேட்டுப் பத்தாம் வேள்வியிற் பன்னியும்
தாமுமாய் ஏகினர் தாவில் துறக்கம்.
காப்பி யாற்றுக் காப்பிய னென்பார்



கோபுரத் தோற்றம்

பாரீர் பாரீர் பாரியூர் வழியின்! ஆளி யுகைக்குங் காளியின் கோயில்!
தண்டலை யிடையே தாயின் கோயில்! ஆற்றின் கரையில் அன்னையின் கோயில்!

நாற்ப திலக்கம் நன்பொற் காசொடு
நாட்டினிற் பாதி நலமுடன் பெற்ருர்.
பரணர் பெற்ருர் பரிசிலாய்ப் பிள்ளையை.
காக்கையாய்க் கரைந்த காக்கைபா டினியார்
ஒண்பொன் பெற்றது ஒன்பதின் துலாமாம் ;
ஒருநூ ருயிரம் ஒண்பொனின் காசாம்.
கபிலர் பெற்ருர் கன்மீ தேறிக்
கொடுத்த நாட்டினே ; கொண்டனர் கோட்டமில்
இலக்க மெண் ணுடை யிரும்பொற் காசுகள்.
அரிசில் கிழாஅரெ னுங் கரிசில் புலவர்
அரசு கட்டிலேப் பரிசிலாப் பெற்றே
ஈதெனக் கேனென ஈந்தே மீட்டும்
தொண் ணு ருயிரம் தூயபொற் காசுகள்
அருத்தியிற் பெற்றே அமைச்ச ராயினர்.
பெருங்குன் றூர்வரு மரும்பெறற் புலவர்
எண் ணுன் காயிரம் ஏமமார் காசும்,
பரிசில் பலவும், பாங்குடன் பெற்றனர்.
புலவர் பாடிய புகழ்மிகு கொங்கின்

2. தமிழரின் பழக்க வழக்கங்கள்

மக்கள் அனைவரும் மேழிச் செல்வர்.
கல்லே தோன்றி மண்ணே தோன்ருக்
காலத் தின்கண் கருங்கை வாளுடன்
முன்னே தோன்றிய முதுகுடி மக்கள்.
நல்லதன் நலனும் தீயதன் தீமையும்
பகுத்துணர் மக்கள் பல்கினர் வதிவர்.
வருணன் கோயிலே வாரிதி யவர்க்கே.
அங்கியஞ் செல்வனே அன்புடன் போற்றுவர்.
காலினே வானினேக் கடவுளாக் கண் ணுவர்.

விரிசுடர்ப் பரிதியை விளங்குதண் மதியினை
நாளினைக் கோளினை நாளுந் தொழுவர்.
ஆணும் பெண்ணும் அன்பினிற் கூடி
மகப்பே றுபெற மாரனைத் தொழுவர்.
திருவினைக் கருதித் திருமா மகளையும்
புலவலி கருதிப் புலமா மகளையும்
வணங்குந் தன்மையர் ; வாய்மொழி யாளர்.
வெற்றியைக் கருதிக் கொற்றவை பரசுவர்.
கேட்டை விளக்குஞ் சேட்டைத் தேவியைத்
தீங்கின் தெய்வமாத் தெளிந்த கொள்கையர்.
உயிருணுங் கூற்றினைக் காலன் என்பர்.
வேத வழக்கே வேளிர்தம் வழக்கு.
ஐந்திணைப் பகுப்பும் அருமறைப் பகுப்பே.
அதனுரை காரர் அக்கருத் தறையார்
வேண்டிய வாறெலாம் விளம்பிச் சென்றனர்.
மாநில மதனை மாதெனக் கொள்ளுவர்.
நீரையும் நீரினை நல்குமா முகிலையும்
சாற்றிப் போற்றுவர் சாதுகை மாந்தர்.
‘நளியிரு முந்நீர் நாவா யோட்டி
வளிதொழில் கொண்ட வுரவோர் மரபினர்’
முற்றத் துறந்த முனிவர் முழுமுதற்
றேவர் தென்புலத் தாரெனு மிவர்தம்
கடனினைத் தீர்க்கும் கடப்பாட் டாளர்.
நால்வகைச் சாதியை நனியுடம் பட்டவர்.
பார்ப்பார் நோவன செய்யாக் கொள்கையர்.
மறந்தும் ஆற்றார் மாபழிச் செயலை.
உச்சியிற் கொண்ட நச்சுங் குடுமியர்.
மறைநெறி வழுவா மாண்ட வொழுக்கினர்.
அரனே அரியே அயனே சேயே

ஆயிரங் கண்ணோன் ஆர்கலிக் கடவுள்
என்னும் இவர்தமக் கெழிலுரு வெழுப்பிக்
கோயிலில் வைத்து நேயமாய் வணங்குவர்.
" இம்மை யுலகத் திசையொடும் விளங்கி
மறுமை யுலகமும் மறுவின் றெய்துப
செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்ம லோரெனப்
பல்லோர் கூறிய பழமொழிப் " பொருளை
நன்னர் அறிந்த நற்றமி ழாளர்.
ஐதுடை யைம்படைத் தாலிகள் அணிவார்.
'பேயும் அறியா மறையமை புணர்ச்சியர்'
கண்ணும் மனமும் தம்முள் இயைவதே
நன்மண மாக நயந்த நற்றமிழ்
மரபினில் வந்த மாபுக ழாளர்.
மாசினைப் போக்க மாண்புனல் படிதல்,
நவைகள் தீர நளிகட லாடல்,
விரிச்சி யோர்த்தல், விழுப்புள் நோக்கல்,
மறைமொழி மந்திரம் மாண்பினிற் கூறி
முற்றிய அன்பொடு முரசம் பரவல்,
வேய்ங்குழ லூதி வேண்டுவ வேண்டல்,
என்னு மிவைதமை எழுச்சியோ டுஞற்றிய
மரபின் வந்த மாண்ட வொழுக்கினர்.
வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி
அருளு மியல்பினர் ; மருளினை யில்லார்.
அந்தி யந்தணர் அருங்கட னிறுக்கும்
முத்தீ விளக்கம் எத்திசை யானும்
விளங்கச் செய்யும் களங்கமில் நெஞ்சினர்.
அன்பிற் பெரியார், அருளிற் பிரியார்.
வீயாச் சிறப்புடை வேள்விகள் முற்றி

யூபம் நட்டோர் வழியில் வந்தவர்,
நன்றி மறவா நல்லற முடையார்.
‘ நல்ல போலவும் நயவ போலவும்
தொல்லோர் சென்ற நன்னெறி போலவும்
காதல் நெஞ்சின் இடைபுகற் கலமரும் ’
ஏதின் மாக்கள் பொதுமொழி கொள்ளார்.
ஒருவர் ஒருவர்க் கியலும் வகையால்
அருஞ்செய லாற்றி அகமிக மகிழ்வர்.
‘ பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா ’
ஆதல் அடக்கிச் சாதல் நீங்க
அவ்வைக் கீந்த அஞ்சி மருள
வரையா தீயும் வண்மைக் கையர்.
தமிழிற் பிறந்து, தமிழில் வளர்ந்து,
தமிழே பயின்று, தமிழே பயிற்றித்,
தமிழிற் பேசித், தமிழில் எழுதித்,
தமிழே நுகரும் தமிழின் வாழ்க்கையர்.
நோய்நொடி தம்மால் நொந்தன ரேனும்
மருந்தினை யருந்தி, மாவலி பெற்றுத்,
தமிழே பயில்வர், தமிழே பயிற்றுவர்.
இந்நாட் டினர்தாம் இங்ஙனம் இருப்ப
இவ்வுண் மையினை இறையும் உணரீர்

3. இக்காலத்துச் சில தமிழர் கருத்து

“ அருமறை யில்லை, ஆறங் கமிலை,
புலவர் மொழிந்த புராணம் பிதற்றல்,
இதிகா சங்கள் இரும்பொய்க் கோட்டை.
இலக்கியம் வீணே, இலக்கணஞ் சும்மா,
இலக்கணப் புலவனை யிறுகப் பிணித்துக்

கருங்கடல் எறிந்து கலித்துத் திரிமின் ;
சங்க நூல்களைச் சங்கரித் திடுமின் ;
புலவன் வாய்க்குப் பூட்டினை யிடுமின் ;
புலவன் ஒழிந்தால் புன்தமிழ் ஒழியும்.
பயனில் பழந்தமிழ் நூல்களைக் கற்றால்
கஞ்சிக் குப்பா ? கடிக்கப் பயறா ?
பழந்தமிழ்ப் பண்டிதன் பாட்டின் பாவம்
அறியான், அளப்பன் அண்டம் வரைக்கும்.
பசலித் தமிழினைப் பரிந்து கற்று
வாழ்ந்ததும் போதும், வந்ததும் போதும்.
பிறந்தன இறக்கும் இறந்தன பிறக்கும்
என்றின் னோரன எண்ணத் தொலையா
மொழிகளைப் பேசி மோசம் போனீர் - அதனால்,
வீரமு மில்லை, மானமு மில்லை,
நாட்டின் பற்றிலை, நமரிடம் பற்றிலை,
பொன்னும் இல்லை, மணியும் இல்லை,
பேச்சுமூச் சற்றுப் பேதைய ராகி,
என்றும் ஏழையாய், என்றும் அடிமையாய்,
இருந்தே போனோம் இனியவை வேண்டேம்.
சாதியும் வேண்டா, சமயமும் வேண்டா,
சாமியும் போதும், பூதமும் போதும்,
சாமிக் கெனவே ஆமிப் பொருளால்
நமக்கென நல்ல பலசெய லாகும்.
எஞ்சா வழகுடைப் பஞ்சா லைகள்
சமைத்தி டாமல் சாமிக் கழாதிர்.
ஏழைக் கெனவே எத்தனை சோறு ?
அடியா ரென்னும் அன்பின் அடியாய்ச்
சோணா சலமெனச் சும்மா மொழிந்து
வெண்பொடி பூசிக் கண்டிகை யணிந்து

சுருட்டுப் பீடி மருட்டுங் கஞ்சா
முதலிய வற்றினை முனைந்து புகைத்துத்
திரியுமாண் டிகளைத் திருத்தி செயலால்
நன்மை யுண்டோ புன்மை யல்லால்?
நற்பழச் சாறு நாறு நறுநெய்
தேனே பாலே தெளிபன் னீரே
குழவித் தீநீர் குளிர்சாந் தம்மே
எனுமிப் பொருள்தமை யேதில் சாமியின்
தலையிற் கொட்டித் ததிங்கிண தோமெனத்
தைத்தா வாடித் தவிக்கின் றீரே.
கோயிலும் வேண்டா குளமும் வேண்டா.
அறத்தைக் கொன்று மறத்தைப் பெருக்குமின்.
சாமியென் பீரேல் சந்ததஞ் சங்கடம்.
கடவுளைப் பகைக்கக் கண்டவா பழிக்கக்
கற்றுக் கொண்மின்; கணமுந் தாழலிர்.
கற்றனி ராயின் உண்மை யறிவே
உதயம் ஆகும்; உதித்த அறிவால்
நாட்டினைத் தாங்கும் நற்றா ணுவீர்"
என்றே பிதற்றி எங்குந் திரிந்து
கொக்கரிக் கின்ற கோணல் வழியுடைத்
தமிழன் பர்காள், தயவுடன் கேண்மின்,
ஆக்கங் கருதி அருளும் அன்பும்
அளைஇச் சொன்ன ஆர்வலர் மொழியிது.
கேண்மி னிதனைக் கேடென வொன்றிலை.
இருமைப் பேறும் இலகுவிற் கிட்டும்.

4. பாரியூரும் அதனயலும்

இன்னன வளமுடை யிம்மலை நாட்டினில்
கருதுங் காஞ்சிக் கோயில் நாட்டுப்

பகுப்பினில் வந்தது பாரியூர் என்ப.
நெளிந்து நெளிந்து நின்மல நீருடன்
பவானியிற் பிரிந்து பழனம் பாய்ந்து
செல்லும் செய்சூழ் செயிரில் கால்வாய்க்
கரையில் உளது கறையிலா அவ்வூர்.
அரனுக் கொன்றும் அரியினுக் கொன்றும்
கோட்டமில் கொண்டக் காளிக் கொன்றுமாய்க்
கோட்டம் மூன்றினைக் கொண்டதப் பரையூர்.
இத்தமிழ் நாட்டினில் முத்தமிழ் வளர்த்த
முடியுடை மூன்ருங் குலோத்துங் கனெனும்
மாபெருஞ் சோழன் ; மாதினை வணங்கிப்
பகைவரைப் பஞ்செனப் பறக்க வடித்தோன்,
வாடாப் புகழினன், ஓடாப் பூட்கையன்
சிங்கச் சிவாஜி ; சீர்மிகு மைசூர்
ஆண்ட ஆடல் ஆண்மை ஓய்சளர்
எனுமிவர் தம்மால் எண்ணில் உதவிகள்
பெற்றது வென்றே பெருமையிற் றெரிக்கும்
கன்மே லெழுத்துக் கணக்கில வுண்டால்.
தண்டமிழ் நாட்டின் தாவில் விடங்கத்
தலங்கள் ஐந்தனுள் தண்பரை யூரும்
ஒன்றென மொழிப நன்றறி மாந்தர்.
அமர விடங்கப் பெருமா னென்னும்
பெயரும் இதனுடைப் பெருமையை விரிக்கும்.
பாரியின் பறம்பு பாரியூர் மேற்றெனச்
சொன்ன புலவனின் சோர்வில் மொழிகள்
உன்னற் குரித்தே உண்மை உணர.
கோட்டமில் கொடையான் கோபி செட்டி
வறியார்க் கீய வான்பொரு ளில்லாக்
காலை யம்மையைக் கருதி யிரந்து

கனபொருள் கண்டு களிப்புடன் கொண்டு
வண்மையின் வன்மையால் வறியார்க் கீந்தே
இசைபட வாழ்ந்தனன் ; ஈதலின் ஊதியம் !
முத்துக் குமரனும் முழுமுதல் வீரன்
வெற்றி விழைந்து விந்தையைப் பரவ,
அன்னையும் மகிழ்ந்து ஆசிகள் பகர்ந்து,
கனவா ளொன்றனைக் களிப்பிற் கொடுத்த
காரணத் தானே கறையிலா வக்குலம்
கனவா ளமர பாயிற் றென்பர்.
பாரியூர் செல்லப் பாதைகள் பலவால்.
கொங்கர் வருவர் கோவையி னின்றும்.
ஈரோ டிருந்தும் இவ்வூர் வரலாம்.
திருப்பூ ரிருந்தும் தீதில் வழிகள்.
சத்தியி லிருந்தும் சத்தியைக் காண
நத்திய மாந்தர் நனிவரு வாரே.
காலிற் காரிற் கல்வழி வரலாம்.
பரியூர் தியினும் பாரியூர் வருவர்.
வழியிரு புறத்தும் வளவயல் மிகவுள.
வன்புல மேனும் மென்புல விளையுள்
ஒன்றுநூ றாக ஓங்கி விளையும்.
கழனிக் கண்ணே களமர் குழுமிக்
கவற்சி யின்றிக் கவலையேற் றத்தால்
நீரிறைக் குமொலி நிலவும் யாங்கணும்.
காடும் பலவே மேடும் பலவே.
கல்லும் முள்ளும் கணக்கில காணும்.
வெயிலின் வெம்மையை வெறுத நீர்மையால்
ஒல்காப் பெருமைத் தொல்காப் பியமுனி
'வெம்மை வேண்டல்' எனுநூற் பாவினை
விளம்பிச் சென்றான் வேறிலை செய்தி.

மோட்டார் வண்டிகள் காட்டாற் றாலே
விரைந்து செலினே வெண்புகை போல
வானில் எழுதுகள் காணுங் காட்சியாம்.
நெடுவழி யிடையே நீண்டு வளர்ந்த
தருக்கள் அடர்ந்த தண்டலை களிலே
கருப்பன் காடன் கனமா வடியான்
என்னு மிவர்தம் எழிலுரு வங்களைச்
சுடுமணிற் செய்து வண்ணந் தீற்றி,
உருத்த விழியும் பருத்த தொந்தியும்,
முறுக்கிய மீசையும் முன்கை வாளுமாய்க்,
கண்டோ ரனைவருங் கலங்கும் வண்ணம்,
நின்ற கோலமா யிருந்த கோலமாய்க்
கட்டி யிருப்பர். கரும்பனை யொன்றில்
மாட்டிய சங்கிலி மறுபனை யொன்றில்
கோக்கப் பெற்றுக் கல்லென வொலிக்கும்.
இடையே மாட்டிய இன்னொலி மணிகள்
செம்மறிக் கழுத்திற் சேர்த்த மணியொடு
இரட்டி மதியினை மருட்டும். இதுவலால்,
இடந்தொறு மிடந்தொறும் எஃகி னியன்ற
வேற்றலைக் கண்ணே மாற்றரு புளிமிகு
எலுமிச் சங்கனி யெழிலுறச் செருகி,
மலர்த்தொடை சூட்டி விடுபூத் தூவிச்,
சந்தனப் பொட்டுடன் கந்துகள் காணும்.
பாரீர் பாரீர், பாரியூர் வம்மின்!
ஆறெனக் கிடந்த அகன்ற சாலை.
அந்தியூர்ச் சாலையு மதுவே யென்பர்.
காலாற் செலினே கல்லிரண் டாகும்.
வழியிரு மருங்கரும் விழுக்குலைத் தாழை.
வேறுள தருக்களும் விரவிநிற் கும்மே.

ஆற்றின் அரவமும் ஆலையின் அரவமும்
சங்கின முழக்கமும் பொங்கி யொலிக்கும்.
எருமையும் எருதும் எருத்த மணிகள்
கல்லென வொலிக்கக் கால்பெயர்த் திடுமால்,
கரும்பின் தேனும், கனியின் தேனும்,
மலரின் தேனும், மாட்சியிற் பெருகிக்
காலிற் கயத்திற் கலத்தலால் மீன்கள்
பருகிப் பருகிப் பரையைப் பரசும்.
நாகிளங் கன்று நனிதுயில் கொள்ளப்
பச்சைத் தேரை பாட்டினை யிசைக்கும்.
களிறுகள் மாய்க்கும் கதிர்மிகு கழனிகள்
கணக்கில வாகக் கண்ணிற் காணும்,
வீழுடைத் தாழை, விழுக்கனி வாழை,
மங்கல மஞ்சள், மாவெண் பாரம்,
எங்கும் உளவால். எணமுடி யாது.
வரம்பெலாம் பனைகள் நிரம்பிநிற் கும்மே.
வந்தது பாரியூர் ! வாழியென் னம்மை !
ஆளி யுகைக்குங் காளியின் கோயில் !
தண்டலை யிடையே தாயின் கோயில் !
ஆற்றின் கரையில் அன்னையின் கோயில் !
செடியின் மலரும், கொடியின் மலரும்,
நீர்த்தா மரையும், நிலத்தா மரையும்,
தாழையுங், தளவமும், தாதுகு கொன்றையும்,
நந்தி நறவ நறும்புன் னாகமும்,
செறிந்து மலர்ந்த செம்மலர் வனத்து
வண்டுகள் பொம்மென வாய்விள் ளும்மால்.
முத்துவே லப்பன் முழுமனம் போல
எங்கும் தண்மை ! எங்கும் இன்னருள் !



அன்னையின் ஸந்நிதி

எங்தூர் தொண்டர் எழுந்து நின்று
தாயே, எடிக்தூத் தயைபுரி வாயே
என்றே ஏத்தி நிற்பர், (நீவிநம்)
இன்புடன் துதித்தே இநமையும் பெறுமினே.

கோணல் மதிமிகு வீணரே வம்மின்.
எங்குந் தொண்டர் எழுந்து நின்று,

5. அன்னையின் துதியும் ஆற்றுப்படையும்

தாயே எமக்குத் தயைபுரி வாயே,
நாரா யணியே, நாத வுருவினாய்,
ஊரு மில்லாய், ஒருகுல மில்லாய்,
குணமு மில்லாய், குறியு மில்லாய்,
களங்கமில் முகத்தைக் கறைசெய் தாங்கு
மான்மதத் திலகம் மகிழ்ந்தணிந் தோயே,
இரவியும் ஆனாய், இந்துவும் ஆனாய்,
பொற்புடைத் தோள்களிற் பொன்வளை பூண்டாய்.
தத்திய முத்தின் வடமணி களத்தாய்,
அந்தமில் அழகுடை அன்பார் அன்னாய்,
தாமரைக் காட்டினைத் தணவா துறைவீ,
சக்கர வுறையுளாய், அக்கர வுருவினாய்,
மூவர் போற்றும் முழுமுதற் சத்தீ,
பிரமக் கிரந்தியைப் பிளக்கும் ஆற்றலாய்,
அமுதப் பெருக்குடை அங்கயற் கண்ணாய்,
பிறவிக் காட்டினைப் பிளந்தே யொழிக்கும்
கோடரி போல்வாய், கொண்டடத் தம்மா,
சங்கரி, சீகரி, சாம்பவி, சாந்தே,
நிரஞ்சனை, நித்தியை, நிர்க்குணை, நிஷ்களை,
கொங்குநாட் டின்கண் தங்கி யுறைவாய்,
ஐய மொழிக்கும் அறிவா ரன்னாய்,
கருங்குழல் நங்காய், கரும்பின் மொழியாய்,
எல்லாம் வல்லாய், எல்லாம் ஆனாய்,
இரீங்கா ரமெனும் இன்மா ளிகையின்
குடுமியில் நின்று குறுகுறு புறவே,

நல்லார் மனத்தை நனியிடங் கொண்டாய்,
அல்லார் மனத்தை அணுகா தகல்வாய்,
நானிலத் தார்க்கு நற்கதி யளிப்பாய்,
இரீங்கா ரமெனும் இன்மலர்க் கிளையில்
இருந்தே வின்கனி இனிமையிற் கோதும்
வளைவாய்க் கிள்ளாய், வரந்தரு வோயே,
நெறியுடைப் பொறிகளில் நயந்து வதிவாய்,
மாகே சுவரீ, மாபெருந் தேவீ,
பவத்தைப் போக்கும் பராபரி யன்னாய்,
மாபெருஞ் சத்தீ, மாவலி யுடையாய்,
நத்திவந் தோர்க்குச் சித்தி யளிப்பாய்,
மந்திர தந்திர மாபெரு யோகம்
எல்லா நீயே எங்கள் அம்மே,
மனுவித் தையினை, மதிவித் தையினை,
உனதாக் கொண்ட உறுமதி யுடையாய்,
முருந்தேர் பல்லும் முத்துறழ் முறுவலும்
உடையாய், அருளாய், உலகுடை யன்னாய்,
பைரவி, பகவதி, பதுமா சனத்தாய்,
ஆயிர முடியாய், ஆயிரங் கண்ணாய்,
ஆயிர வடியாய், ஆயிர வடிவாய்,
ரமணி, ரமையே, ரஞ்சனி, ரம்மியை,
மறைகளா லறியும் மாண்பினை யுடையாய்,
விந்தப் பொருப்பினில் விழைவுட னுறைவாய்,
விசயே, விமலே, வன்னியில் வதிவாய்,
மலயா சலத்து மாபெரும் அனமே,
பெரிதிற் பெரியாய், சிறிதிற் சிறியாய்,
அக்கர அடிசில் அருத்தியி னருந்துவாய்,
கருமத் தொடர்க்குக் கரியாய் நிற்பாய்,
அலைமகள் கலைமகள் அருகினில் நிற்ப

அன்பா லவர்தமை ஆட்கொளும் அன்னாய்,
மஞ்சட் குங்குமம் விஞ்சப் பூசிய
கண்கவர் வனப்புடைக் கற்பகக் கனியே,
கருணை பொழியும் கடைக்கண் நங்காய்,
கலையினைப் பேசுங் கலையூர் கன்னி,
ஆய்ச்சிய ரெடுத்த வையங் கவினஞ்
சிவனுஞ் சீரக முடையாய், அருளாய்,
பசுபா சங்களை நாசஞ் செய்வாய்,
கண்ணுதல் கொண்ட காதல் நோயினைப்
புன்சிரிப் பாலே போக்கு முகத்தாய்,
கயிலைக் களிற்றின் கார்மடப் பிடியே,
முனிவர் மனத்து முழுநட மாடும்
அனமே, அலகில் அழகின் கொழுந்தே,
வீரத் தாயே, விண்ணின் மணியே,
பலமறைக் கனிகளின் பதமுறு சாறே,
விரைவினில் வந்து நிறைவில் அளிப்பாய்,
தமிழாய் நின்று தமிழினை விளைப்பாய்
என்றே ஏத்தி நிற்பர், (நீவிரும்)
இன்புடன் துதித்தே இருமையும் பெறுமினே.

மேற்கோளாக எடுத்தாண்ட நூல்கள்

1. தொல்காப்பியம்
   ஷை உரை
2. பதிற்றுப்பத்து
3. பரிபாடல்
4. குறுந்தொகை
5. அகநானூறு
6. புறநானூறு
7. ஐங்குறுநூறு
8. பத்துப்பாட்டு
9. கலித்தொகை
10. திருக்குறள்
11. சிலப்பதிகாரம்
12. மணிமேகலை
13. சிந்தாமணி
14. கலிங்கத்துப்பரணி
15. கம்ப ராமாயணம்
16. புறப்பொருள் வெண்பாமாலை
17. தமிழ் வரலாறு (ரா. ராகவய்யங்கார்)
18. கொங்குமண்டில சதகம்
19. லலிதா ஸஹஸ்ரநாமம்
20. லலிதா த்ரிசதி
21. பெரியபுராணம்

1812